**வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்**

**2019–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 09–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்**

**தீர்மானம் நகல்கள்**

**தீர்மானம் எண் : 184 / 2019, நாள் : 09.08.2019**

வெள்ளகோவில் நகராட்சியில் 2019–2020–ம் ஆண்டிற்கான சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லாஇனங்கள், உரிமக் கட்டணங்கள் 100 சதவீதம் உரிய காலத்திற்குள் வசூல் செய்ய வரிசெலுத்துபவர்களுக்கு அறிவிப்பு நோட்டீஸ்கள், ஆட்டோ விளம்பரம், பிளக்ஸ் போர்டுகள் அமைக்கவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,00,000 /–ம் நகராட்சிப் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலககுறிப்பு

1) நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் ரு. 1,00,000 /–க்கு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2019–2020–ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) மேற்காணும் பணிகளுக்கு பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளிகள் பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கோப்பு எண். 1302 / 2018 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 185 / 2019, நாள் : 09.08.2019**

அரசு கூடுதல் தலைமை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அவர்களின் நேர்முக கடிதம் எண் 11490 / CGS-1/2019, நாள். 05.07.2019-ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி ஜல்சக்தி அபியான் திட்டம் Phase I 01.07.2019 முதல் 15.09.2019 மற்றும் Phase II 01.10.2019 முதல் 30.11.2019 வரை செயல்படுத்தப்படவுள்ளதால் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரத் தட்டிகள் வைக்கவும், துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கவும் விழிப்புணர்வு பேரணி நடத்தவும், கூட்டங்கள் நடத்தவும், பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஆட்டோ விளம்பரம் செய்யவும், புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 20,000 /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 186 / 2019, நாள் : 09.08.2019**

2019–2020–ம் நிதியாண்டில் இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி, சேவை வரி (GST) மற்றும் ஆண்டு இறுதியில் வழங்கப்படும் படிவம் 16 A, 16 ஆகியவைகள் தயார் செய்து தாக்கல் செய்ய தனியார் தணிக்கையின் மூலம் (Private Auditor) பணியை செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000 /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 1570 / 2017 / பி3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 187 / 2019, நாள் : 09.08.2019**

வெள்ளகோவில் நகராட்சியின் 2018–19–ம் ஆண்டுக்கு தயார் செய்யப்பட்ட நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு ஒப்புதல் வழங்கலாம்.

(கோப்பு எண். / 2019 / சி1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 188 / 2019, நாள் : 09.08.2019**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண். 322 / 2019 / அ3, நாள். 11.07.2019–ல் தெரிவித்துள்ளபடி நகராட்சிகளில் பணிபுரியும் கணக்கர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி Batch-III 15.07.2019 முதல் 19.07.2019 வரை நடைபெற்ற பயிற்சியில் இந்நகராட்சி கணக்கர் கலந்து கொண்டமைக்கு பட்டியல்படி கேட்புத் தொகை ரூ. 5000 /–ம் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 975 / 2019 / சி1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 189 / 2019, நாள் : 09.08.2019**

நிதித்துறை (சம்பளம்) அரசாணை எண் : 240, நாள் : 02.08.2019-ன்படி தமிழக அரசு பணியாளர்களுக்கு மற்றும் உள்ளாட்சிப்பணியாளர்களுக்கு தீபாவளிப் பண்டிகை முன்பணமாக ரூ. 5000 /–த்திலிருந்து ரூ. 10000 /–ஆக உயர்வு செய்ததை மன்றத்தின் பார்வைக்கும், மேற்படி அரசாணையின்படி முன்பணம் கோரும் பணியாளர்களுக்கு தொகை வழங்கவும், மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1406 / 2019 / அ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 190 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2 மற்றும் 6–ல் உள்ள திருச்சி கோவை ரோடு (வள்ளியரச்சல் சாலை அருகில்) மற்றும் வார்டு எண். 11 செம்மாண்டம்பாளையம் சாலை குறுக்கு வீதிகளில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 39,90,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடமிருந்து சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 191 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 திருவள்ளுவர் நகர் குறுக்கு வீதிகள் மற்றும் வார்டு எண். 12 மூலனூர் ரோடு புள்ளிசெல்லிபாளையம் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும்

அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 39,90,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடமிருந்து சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 192 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 அமராவதி நகர் குறுக்கு வீதிகள் மற்றும் வார்டு எண். 13 மூலனூர் சாலை முதல் மூத்தநாயக்கனூர் சாலை வரை உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 37,05,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடமிருந்து சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 193 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7 அம்மன்கோவில் வீதி குறுக்கு வீதிகள், வார்டு எண். 14, தாராபுரம் சாலை முதல் அகலரப்பாளையம்புதூர் சாலை வரை, சேரன் நகர் குறுக்கு வீதிகள் மற்றும் வார்டு எண். 13 சுப்பிரமணியகவுண்டன்வலசு பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 37,63,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிடமிருந்து சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 194 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதுப்பை தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வெள்ளகோவில் வரும் பழுதடைந்துள்ள 8” AC மெயின் குடிநீர் குழாய்களை மாற்றியமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 5,00,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். /2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 195 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 13, புள்ளசெல்லிபாளையம் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள்

தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 196 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, அகலரப்பாளையம்புதூர் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 197 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21, அமராவதி நகர் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 198 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, சேரன் நகர் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 199 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, திருவள்ளுவர் நகர் பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 200 / 2019, நாள் : 09.08.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2, குமாரவலசு பகுதியில் உள்ள தார்சாலைகள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாக இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதியும் பணியின் அவசியம் கருதியும் இந்த சாலைகளை சீரமைப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 201 / 2019, நாள் : 09.08.2019</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட உள்ள கான்வென்ட் ரோடு பகுதியில் தற்பொழுது வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் வடிகாலின் மேல் பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி மூடி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,00,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 202 / 2019, நாள் : 09.08.2019</u>**

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் மற்றும் திட்டப்பணிகள் 2019—20—ன்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை அவ்வபோது உயரதிகளின் ஆய்வுக்கூட்டங்களுக்கு தேவையான புள்ளி விபரங்களை கணினியில் தயார் செய்து வண்ணப் புகைப்படங்களாக எடுக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10,000 /—க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 203 / 2019, நாள் : 09.08.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் வண்டி எண். TN 42 Y 3074 வாகனத்திற்கு முன் மற்றும் பின்புற டயர்கள் புதிதாக வாங்கி பொருத்த 02.08.2019ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்

| டயர் கம்பெனி பெயர் | டயர் அளவு | ஒரு டயரின் விலை | தேவையான டயர்களின் எண்ணிக்கை | மொத்த டயர்களின் விலை ரூபாய். |
|---|---|---|---|---|
| ஸ்ரீ காடேஸ்வரா டயர்ஸ், சேரன் நகர், வெள்ளகோவில் | 7.50X16sm 99MRF | 7,800 | 4 Nos | 31,200 |
| ஸ்ரீ சக்தி விநாயகா டயர்ஸ், கோவை ரோடு, அவினாசி | 7.50X16sm 99MRF | 7,900 | 4 Nos | 31,600 |
| வேலு டயர்ஸ், வெள்ளகோவில் | 7.50X16sm 99MRF | 8,000 | 4 Nos | 32,000 |

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளி தெரிவித்துள்ள ஸ்ரீகாடேஸ்வரா டயர்ஸ், வெள்ளகோவில் என்பவருக்கு விநியோக உத்திரவு வழங்கலாம்.

(கோப்பு எண். 946 / 2019 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 204 / 2019, நாள் : 09.08.2019**

சுற்றுச்புறச் சூழல் பாதுகாப்புச்சட்டம் 1986 (சட்ட எண். 29/1986)–ல் பிரிவு 3,6மற்றும் 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன்படி 2019-ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன்கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனைக்கு எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடைசெய்யப்பட்டதற்கான அபராத தொகை விதிக்க உபவிதிகள் 04.07.2019ம் தேதிய தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டு ஒரு மாத காலம் ஆகியும், ஆட்சேபணை தெரிவிக்கும் காலம் முடிவுற்றதாலும், மேற்கண்ட ஒரு மாத காலத்தில் ஆட்சேபணைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே

அ. மேற்படி உபவிதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிடவும்,

ஆ. மாவட்ட அரசிதழில் வெளியிட ஆகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) அ மற்றும் ஆ மன்றம் அனுமதிக்கலாம்
2) பொது நிதியில் இருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 819/2017/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 205 / 2019, நாள் : 09.08.2019**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரம் – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தனியே உருவாக்கப்பட்ட கொள்கைகளை (SWM Policy) அரசிதழில் வெளியிட வேண்டி மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யவும், மேற்படி கொள்கைகளை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மாவட்ட அரசிதழில் வெளியிட ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. பொது நிதியில் இருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 819/2017/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 206 / 2019, நாள் : 09.08.2019**

இந்நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகளில் குழாய் விஸ்தரிப்பு மற்றும் காலமுறை போன்ற காரணங்களால் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் வாகனங்கள் சென்றுவர இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி கீழ்காணும் தார்சாலைகளை சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகவும், அத்தியாவசியமாகவும் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 12 புள்ளசெல்லிபாளையம் காலனி முதல் மூத்தநாயக்கனூர் சாலை, வார்டு எண்.11 செம்மாண்டம்பாளையம் சாலை முதல் மூலனூர் சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 14 அகலரப்பாளையம்புதூர், வார்டு எண்.17, எல்.கே.ஏ.நகர், வார்டு எண். 19 கே.பி.சி.நகர், வார்டு எண். 12 கரட்டுப்பாளையம், கரட்டுப்பாளையம் அரிஜன காலனி பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |

| | | |
|---|---|---|
| 2 | வார்டு எண். 14, தண்ணீர்பந்தல், வார்டு எண். 9 உரக்கிடங்கு முதல் கள்ளமடை சாலை மற்றும் வார்டு எண். 2 கல்லாங்காட்டுவலசு பகுதிகளில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 12 புள்ளசெல்லி பாளையம், வார்டு எண். 1 திருச்சி கோவை ரோடு பிரிவு உப்புப்பாளையம் சாலையில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |
| 3 | வார்டு எண். 11 மடாமேடு முதல் சொரியங்கிணத்துப் பாளையம் பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் வார்டு எண். 13, கணபதிபாளையம் முதல் ஒரம்புபாளையம் சாலை, வார்டு எண்.3 அறிவொளிநகர், வார்டு எண். 18 தாராபுரம் சாலை முதல் சீரங்கராயகவுண்டன்வலசு சாலை மற்றும் வார்டு எண். 13 அரியாண்டிவலசு பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 200.00 |
| 4 | வார்டு எண்.2 ரெட்டிவலசு பகுதியில் தார்சாலை அமைத்தல், புதுப்பித்தல் மற்றும் வார்டு எண். 3 எம்.ஜி.நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 100.00 |
| | **மொத்தம்** | **700.00** |

நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-20 திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2019-20 திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். 1125 / 2019 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 207 / 2019, நாள் : 09.08.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வீரக்குமார் நகர் கட்டணக் கழிப்பறை, இருக்கைகள், கழிவுநீர் செல்லும் குழாய்கள், கதவுகள் மற்றும் தண்ணீர் தொட்டிகள் பழுதடைந்துள்ளது. மேற்படி கழிப்பறை பழுதுகளை சரிசெய்ய ரூ. 1,60,000 /–க்கு மதிப்பீடு பணிமேற்பார்வையாளரால் சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அங்கீகாரம் வேண்டி மன்றப்பொருள் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்

(கோப்பு எண். / 2019 / இ1)

**தீர்மானம் – ஒப்பளிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 208 / 2019, நாள் : 09.08.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழிக்கும் பொருட்டு தகுதி வாய்ந்த 1427 தனிநபர்இல்லங்கள் கண்டறியப்பட்டு தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் தனிநபர் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 7 சமுதாயக் கழிப்பிடங்கள், 8 பொதுக்கழிப்பிடங்கள் கட்டப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. வெள்ளகோவில் நகராட்சி திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகராட்சியாக முறையாக 18.08.2018 மற்றும் 19.04.2019 –ல் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நகராட்சியாக மத்திய அரசால் ஆய்வு செய்து அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக (ODF+) சான்று பெறுவதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இதனை தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்து பொதுமக்களின் ஆட்சேபனைகளை பெறவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25,000 /–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 169 / 2017 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 209 / 2019, நாள் : 09.08.2019</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் அபாயகரமான கழிவுகள் எனப் பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. மக்கும் கழிவுகளை நுண் உரக்குடில் மற்றும் உரக்கிடங்கில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத கழிவுகளை மறு சுழற்சி செய்யப்பட்டும் மறுசுழற்சிக்கு ஆகாத கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக வெள்ளகோவில் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) மத்திய அரசால் வழங்கப்படும் மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three star Rating) பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இவ்வறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் வெளியீடு செய்து பொதுமக்களிடம் ஆட்சேபனை பெறவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 25000 /—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 14 / 2017 / எச்1)

**தீர்மானம் — அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. அ. சங்கர்**
**தனி அலுவலர் /**
**ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**